**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 199/2017**

**நாள்.09.07.2026**

**பி.வா.சா. 1- இருதாலய மருதையா பாண்டியன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி வழக்கில் சொல்லிய சொத்து விபரமான "சங்கரன்கோவில் முனிசிபல் கஸ்பாவில் தற்போது வார்டு 27 ல் சங்குபுரம் 3 ம் தெருவில் புஞ்சை சர்வே 149/2 ஏ நம்பர் செண்ட் 52, மேற்படி சர்வே 149/2 பி நம்பர் செண்ட் 20 ஆக மொத்தம் செண்ட் 72 ல் பிளாட் எண்.16"-ல் எனக்கு ஏதாவது உரிமை உண்டா என்றால் எனக்கும் மேற்படி சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. வாதி வழக்கில் சொல்லிய சொத்து விபரத்தின்படி, அவரது வீட்டுக்கு வடக்கில் தெரு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தெருவின் பெயர் சங்குபுரம் 4 ம் தெரு என்றால் சரியல்ல ஓடைக்கு கிழக்கு தான் சங்குபுரம் 4 ம் தெரு உள்ளது நாங்கள் ஓடைக்கு மேற்காக உள்ளோம். வாதி வீட்டுக்கு வடக்கில் உள்ள தெரு சங்குபுரம் 4 ம் தெரு அதை புரியாமல் பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கு வடக்கில் உள்ள தெரு சங்குபுரம் 4 ம் தெரு என்றால் சரியல்ல. வாதி வீடு மற்றும் அதற்கு வடக்கில் உள்ள தெருவுக்கு இடையில் நகராட்சியால் வாறுகால் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வீடு வழக்குச் சொத்திற்கு வடக்கில் உள்ள தெருவுக்கு வடக்கில் உள்ளது என்றால் சரிதான். சங்குபுரம் 4 ம் தெருவில் ஹாலோபிளாக் கல் பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்குபுரம் 4 ம் தெருவில் ஹாலோபிளாக் கல் நகராட்சியால் பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல நாங்கள் பணம் வசூலித்து நாங்களாக பதித்தோம். எனது வீட்டிற்கு நகராட்சி குடிநீர் இணைப்பு உள்ளதா என்றால் ஆமாம்.எனது வீட்டிற்கு நகராட்சி குடிநீர் இணைப்பு சங்குபுரம் 4 ம் தெரு வழியாக வருகிறது என்றால் சரியல்ல சங்குபுரம் 3 ம் தெருவிலிருந்து வரும் கழிவுநீர் ஓடை வழியாக குழாய் பதித்து நகராட்சி குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் ஓடை வழியாக குழாய் பதித்து நகராட்சி குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது சுகாதாரக்கேடு என நகராட்சிக்கு மனு ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது வீட்டின் முகவரி எந்த தெரு என்றால் சங்குபுரம் 4ம் தெரு என கொடுக்கவில்லை, ஓடைக்கு மேற்கு என கொடுத்துள்ளோம். வழக்குரையில் எனது வீட்டின் முகவரி சங்குபுரம் 4ம் தெரு என கொடுக்கப்பட்டு, அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது அதனை எதிர்த்து எனது எதிர்கோரிக்கையில் சங்குபுரம் 4ம் தெரு எனது முகவரி அல்ல என மறுப்பு தெரிவித்தேனா என்றால் ஆமாம் மறுப்பு தெரிவித்துள்ளேன். என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் எனது வீட்டின் முகவரி சங்குபுரம் 4ம் தெரு என கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு என்ன தொழில் என்றால் வீட்டில் தான் இருக்கிறார் வேலை பார்க்கவில்லை மகன் தான் வேலை பார்க்கிறார் வெளியூரில் இருக்கிறார் என்ன வேலை என்று தெரியாது. வாதியிடம் லாரி, பஸ் என வாகனம் உண்டா என்றால் கார் தான் உண்டு வாதியிடம் லாரி, பஸ் உள்ளதா என எனக்குத் தெரியாது. வாதி தனது காரை விடுவதை தான் வாதி கனரக வாகனத்தை நிறுத்துகிறார் என எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதியிடம் கனரக வாகனம் மற்றும் கார் எதுவும் கிடையாது வாதி வீட்டுக்கு வரும் உறவினர்கள் வரக்கூடிய மெதுரக வாகனத்தை நான் கனரக வாகனத்தை நிறுத்துகிறார் என எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சங்குபுரம் 4ம் தெருவில் ஓரத்தில் வாகனங்களை நிறுத்தக்கூடாது என காவல்துறையால் No Parking அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சங்குபுரம் 4ம் தெருவில் ஓரத்தில் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து காவல்துறையிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால் இதுவரை கொடுக்கவில்லை. சங்குபுரம் 4ம் தெருவின் அகலம் என்ன என்றால் எங்களுக்கு கொடுத்தது 3 அடி பாதை, நாங்கள் போட்டுள்ள பாதை 16 அடி. இந்த நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் வந்து தாவா சொத்துக்களை அளந்தாரா என்றால் ஆமாம்.

சங்குபுரம் 3 வது மற்றும் 4 ம் தெருக்கள் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது என்றால் இல்லை. எனது வீட்டிற்கு வரக்கூடிய மின் இணைப்புக்கான மின் கம்பங்கள் சங்குபுரம் 4 ம் தெருவில் உள்ளது என்றால் சரிதான். மின் கம்பங்களில் மின் விளக்குகள் போடப்பட்டுள்ளது என்றால் இல்லை. சங்குபுரம் 4 ம் தெருவில் மின் கம்பங்களில் மின் விளக்குகள் நகராட்சியால் போடப்பட்டுள்ளது, நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சங்குபுரம் 4 ம் தெருவில் ஹாலோ பிளாக் கல் பதித்தது மற்றும் வாறுகால் அமைத்தது யார் என்பதை அறிந்துகொள்ள இந்த வழக்கில் நகராட்சியை ஒரு தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றால் சரிதான். எனது எதிர்கோரிக்கையில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சங்குபுரம் 4 ம் தெருவில் வாகனங்களை நிறுத்தி இடையூறு செய்யக்கூடாது, வாதி சங்குபுரம் 4 ம் தெருவில் வரக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன், ஏனெனில் சங்குபுரம் 4 ம் தெரு எங்களால் சொந்தமாக ஏற்படுத்தப்பட்டது. வாதி வடக்குப் பார்த்து அமைத்துள்ள வாசல் முன்பாக முள்வேலி போட்டு வாதி வெளியே தெருவிற்கு வரமுடியாமல் தடை செய்தது நான்தான் என்றால் சரியல்ல அவர் தான் செய்துள்ளார். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் வாதி வீட்டின் வடபக்கம் உள்ள பின்வாசலை காட்டக்கூடிய புகைப்படம் என்றால் சரிதான். வாதி வழக்கில் காட்டிய சொத்து விபரமும், எனது எதிர்கோரிக்கையில் சொல்லிய சொத்து விபரமும் வெவ்வேறானவை என்றால் சரிதான். வாதி வழக்கில் காட்டிய சொத்து விபரத்தில் எனக்கு ஏதேனும் உரிமை இருந்தால் மட்டும் தான் எதிர்கோரிக்கை தாக்கல் செய்யமுடியும், வேறு சொத்துக்கு தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை தாக்கல் செய்த விதத்திலேயே நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கை 2 ம் தபசில் பாதை எனக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டதா என்றால் இல்லை, மொத்தம் 11 வீட்டுக்காரர்கள் சேர்ந்து பாதை ஏற்படுத்தினோம். எதிர்கோரிக்கை 2 ம் தபசில் பாதையின் உரிமையாளர்களான இதர வீட்டுக்காரர்களை இந்த வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

எதிர்கோரிக்கை 2ம் தபசில் பாதையின் உரிமையாளர்களான இதர வீட்டுக்காரர்களை கட்சி சேர்த்து, தனியாக வழக்கு தாக்கல் செய்தால் மட்டுமே நான் கேட்டுள்ள பரிகாரம் பரிசீலிக்கப்படும் எனது எதிர்கோரிக்கை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கை 3வது தபசில்சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் எனது மனைவி பெயரில் உள்ளது. இந்த வழக்கிற்கு முன்பாகவே எனது மனைவி பெயருக்கு நான் எழுதிக்கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். எதிர்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் எதிர்கோரிக்கை 2, 3 தபசில் சொத்துக்களில் எனக்கு உரிமை கிடையாது என்றால் எனது மனைவி பெயரில் இருப்பதால், எனக்கு உரிமை உண்டு. எதிர்கோரிக்கை 2, 3 தபசில் சொத்துக்களில் உரிமையற்ற நபரான என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மனைவி 2வது பிரதிவாதி தனியாக எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது மனைவி 2வது பிரதிவாதி தனியாக எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளதால், எனது மனைவிக்காக எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி அவரது வீட்டுக்கு வடக்கில் உள்ள பொதுத்தெரு வழியாக சென்று வருவதற்கும் புழங்குவதற்கும், சகல உரிமையும் உண்டு என்றால் சரியல்ல. வாதியின் சட்டப்படியான பாதை உரிமையை தடுப்பதற்கு மறுப்பதற்கு எந்த உரிமையும் எனக்கு கிடையாது என்றால் சரியல்ல. வாதி வீட்டுக்கு கீழ்புறம் காலிமனை என்றால் சரிதான். வாதி வீட்டுக்கு கீழ்புறம் காலிமனைக்கு கிழக்கில் யார் வீடு உள்ளது என்றால் பெயர் தெரியவில்லை. வாதி வீட்டுக்கு கீழ்புறம் காலிமனைக்கு கிழக்கில் உள்ள வீட்டின் பிரதான வாசல் வடக்கில் உள்ள சங்குபுரம் 4 வது தெருவைப் பார்த்து உள்ளது என்றால் சரிதான். வாதி பெண்பாலாக தனியாக இருப்பதால் வாதிக்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல வாதிக்கு மகன் உண்டு. சங்குபுரம் 4 வது தெருவில் உள்ள மற்ற நபர்கள் வாதி சங்குபுரம் 4 வது தெருவை பயன்படுத்துவதை தடுக்கவில்லை என்றால் சரிதான் எனது வீட்டுக்கு முன்பாக படி கட்டுவதால் தடுத்தேன்.

சங்குபுரம் 4 வது தெருவின் அகலம் ஆணையரால் 17 அடி என சொல்லியுள்ளார் அதற்கு எனக்கு ஆட்சேபணை உண்டா என்றால் ஆட்சேபணை கிடையாது. சங்குபுரம் 4 வது தெருவின் அகலம் 17 அடி உள்ள நிலையில், அதில் மெதுரக வாகனங்களை நிறுத்துவதால் எந்த இடையூறும் எனக்கு ஏற்படப்போவதில்லை என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் சொல்லியுள்ள சொத்திற்கான எல்கை விபரங்கள் பூமியில் உள்ளவாறு இல்லாமலும், தெளிவில்லாமலும் உள்ளது என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கையில் சொல்லியுள்ள சொத்தின் அளவுகள் படி பூமியில் சொத்து விபரம் இல்லை என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கை 1, 2 தபசில் சொத்துக்கு கீழ்புறம் ஓடை என்றும், அதற்கு கீழ்புறம் சங்குபுரம் 4 வது தெரு என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். எதிர்கோரிக்கை 1, 2 தபசில் சொத்துக்கு கீழ்புறம் உள்ள ஓடையின் அகலம் என்ன என்றால் 20 அடிக்கு மேலாக இருக்கும். மேற்படி ஓடை செயல்பாட்டில் உள்ளதா என்றால் ஆமாம் ஓடையில் கழிவுநீர் செல்கிறது. நான் சொல்வதுபோல், ஸ்தலத்தில் ஓடை கிடையாது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை, வரைபடம் என்றால் நான் பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை, வரைபடத்தில் வாதி இடத்திற்கு வடக்கில் உள்ள சாலை என வகைபாடு செய்யப்பட்டிருப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாதி இடத்திற்கு வடக்கில் உள்ள பகுதி சாலை அல்ல தனிப்பட்ட பாதை என ஆட்சேபணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம் தாக்கல் செய்துள்ளேன். இன்றைய தேதிவரை வாதி இடத்திற்கு வடக்கில் உள்ள நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சங்குபுரம் 4 வது தெரு பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது, அதனால் எனது எதிர்கோரிக்கையில் சங்குபுரம் 4 வது தெரு பயனாளர்களை கட்சி சேர்க்காததால் எனது வழக்கு அவசியத்தரப்பினரை கட்சி சேர்க்காத காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வாதியைக் கஷ்டப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்ட எதிர்கோரிக்கை வாதியின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு செலவுதொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.07.09 18:27:44 +0530